[20th July 1964

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சுமார் 65,000 முதல் 80,000 வரை மக்கள் தொகை கொண்ட இடங்கள் வட்டாரமாகப் பிரிக்கப் படும். பப்ளிக் எலெக்ஷன் டிபார்ட்மெண்டு அலுவலகம் பாராளு மன்ற, சட்டமன்றத் தொகுதி எல்லைகளை நிர்ணயிக்கும் வேலையை பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. அப்படிப் பூர்த்தி செய்து அதன் பின்பு அவர்கள் எந்த எல்லைகளில் பிரித்துக்கொடுக்கிறார் களோ அந்த அடிப்படையிலும் ஜனத்தொகை அடிப்படையிலும் சர்க்கார் வட்டாரங்களைப் பிரிப்பதற்கு உத்தேசித்திருக்கிறது. குறிப்பாக மொத்த பிளாக்குகள் 375 ஆக இருப்பதைக் கூடுதல் செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லை.

திரு. ம. கமலநாதன் : தேர்தலுக்கு முன்பு இந்த வட்டார தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்குத் தெளிவான பதில் கூறு வதற்கு இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know at what stage the Delimitation of blocks stands?

THE HON. SRI S. M. A. MAJID : A review has been ordered.

திருமதி ரி. குழந்தையம்மாள் : இந்த பிளாக்குகளைப் பிரிக்கும் பொழுது ஒரே ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸருக்குக் கீழே இருக்கக் கூடிய அளவில் பிரிப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அசெம்பளி, பாராளுமன்ற தொகுதி எல்லைகளை எப்படித் திருத்தி எலெக்ஷன் கமிஷன் அமைக் கிறார்களோ அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, கூடிய வரையில் 'மானேஜபிள். வையபிள் யூனிட்' ஆகத் திருத்தி அமைக்க உத்தேசம். இப்பொழுது ஒரு பிளாக்கில் மக்கள் தொகை லட்சத்தின் அளவுக்கு மேலும், லட்ச அளவிலும் இருந்து கொண்டு வருகிறது. அதைக் கூடியவரையில் 'செட்டூஸ்' செய்து 65,000 முதல் 80,000 வரை மக்கள் தொகை இருக்கும்படியாக பிளாக்குகளைத் திருத்தி அமைக்கும் பிரச்னையும் இருக்கிறது.

சட்டசபைத் தொகுதி நிர்ணயக் கமிட்டி

*573 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திரு. ஜே. எல். கபூர் : தலைமையின்கீழ் நியமிக்கப்பட்ட சட்ட சபைத் தொகுதி நிர்ணயக் கமிட்டி சமீபத்தில் எடுத்த முடிவுகள் அடங்கிய அறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Notification of the Delimitation Commission containing its proposals for the delimitation of Assembly and Parliamentary constituencies in Madras State, has been published in an extraordinary issue of the *Fort St. George Gazette*, dated the 23rd June 1964. The Members of

the House would have received copies of this *Gazette*. Hence it is not necessary to place a copy of the proposals of the Delimitation Commission on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த ஆலோசனை போர்டு கூட்டம் உதகையில் நடைபெறுகிற நேரத்தில் சட்டமன்ற எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் சிறைச்சாலையில் இருந்த காரணத்தினால் தான், அந்தக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று மன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் அனுப்பிய மனு அரசாங்கத்திற்குக் கிடைத்ததா? எந்த அடிப் படையில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Employment Exchange

* 574 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons registered their names with employment exchanges in Madras State from 1st January to 31st December 1963; and

(*b*) the number of educated unemployed as on 31st December 1963 in the following categories: I. Graduates, II. Professional graduates and III. Matriculates?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The total number of persons registered with Employment Exchanges in Madras State from 1st January to 31st December 1963 is 3,10,937.

(*b*) The total number of unemployed graduates, professional graduates and matriculates as on 31st December 1963 is 2,545, 126 and 38,514 respectively.

சிறு திட்ட கைத்தொழில்களுக்கு உதவி

* 575 கேள்வி—திரு. முனு. ஆதி: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சைதாப்பேட்டை தாலுகாவில் எத்தனை அரிஜனங்களுக்கு சிறு திட்ட கைத்தொழில்களுக்காக (Small Scale Industries) எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது?

(ஆ) பண உதவி தவிர மூலப்பொருள்களுக்காக வேறு ஏதும் உதவி அளிக்கப்பட்டுள்ளதா? ஆமென்றால் எவ்வகையில் உதவி அளிக்கப்பட்டது?